

# கோலாலம்பூர் திட்டமிடல் கொள்கை

# மறுஆய்வு செய்யப்படலாம்

## அமைச்சர் தகவல்

கோலாலம்பூர், ஆக. 28-

கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியில் மண் திடீரென உள்வாங்கியது போன்ற சம்பவத்தின் அபாயத்தைக் குறைக்க கோலாலம்பூரில் நகர்ப்புற திட்டமிடல் கொள்கையை அரசாங்கம் மறுஆய்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடனடி நடவடிக்கைகள் உட்பட நீண்ட காலத் திட்டங்களைக் கண்டறியுமாறு கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிப்பிடம் தாம் அறிவுறுத்தியுள்ளதாக கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

இப்பிரச்சினையை இன்னும் தீவிரமாகக் கையாள்வதில் நான் உறுதியாக இருக்கிறேன். அண்மையில் கோலாலம்பூரில் நிகழ்ந்த பல சம்பவங்களால் கோலாலம்பூர் மாநகர் மன்றம் உட்பட அனைத்துத் தரப்பினரும் தங்களின் கண்காணிப்பு முறைகளை ஆய்வு செய்து மேம்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது எனவும் அவர் சொன்னார்.

அந்த வகையில், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படும் அபாயத்தை மதிப்பிடவும் குறைக்கவும் உடனடியாக புவியியலாளர்கள், உள்கட்டமைப்பு நிபுணர்களுடன் நெருக்கமாக பணியாற்றுமாறு டத்தோ பண்டாருக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன் என நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அவர் தெரிவித்தார்.

மேலும் கருத்துரைக்கையில், கூட்டரசுப் பிரதேச இலாகாவும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர்களின் புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மூலம் அதன் எஸ்ஓபி எனப்படும் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறையை மேலும் வலுப்படுத்தும் என்றார்.

கோலாலம்பூரில் வாழும் மக்களின் பாதுகாப்பும் நல்வாழ்வும்தான் இப்போது மிகவும் முக்கியம் என்பதால், அனைத்து தரப்பினரும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

கோலாலம்பூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்ட போது அதில் அனைத்து தரப்பினரும் அக்கறையுடன் ஈடுபட்டதை தாம் பாராட்டுவதாகவும் அவர் சொன்னார்.

இப்பிரச்சினையை உண்மையுடன் செயல்பாட்டு அடிப்படையில் கையாள்வது மிகவும் முக்கியம். வெறும் சொல்லாட்சியால் மக்களின் கவலையை மறக்கச் செய்ய முடியாது என்றார்.

எந்தக் கட்சியும் கலங்கிய நீரில் மீன் பிடிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மலிவான விளம்பரம் தேடவோ அல்லது இந்த விவகாரத்தை அரசியலாக்கவோ தேவையில்லை. இப்போது எங்கள் கவனம் அனைவரின் பாதுகாப்பு, நல்வாழ்வுக்கான ஆக்கப்பூர்வமான தீர்வைக் காண்பதுவே என்றும் அமைச்சர் சொன்னார்.